புரட்சிப் பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மார்ச் (March) 26, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 13 • விலை(PRICE) ரூ.6.00

## 26,000 ஒபிசி மருத்துவ மாணவர்களின் கல்வி உரிமையை மீட்டுத்தந்த மு.க.ஸ்டாலின்

மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய கோட்டாவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை உறுதிசெய்ய வேண்டுமென்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்போராட்டம் நடத்தி, ஒட்டுமொத்த இந்திய இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குமான உரிமையை 2021-இல் நிலைநாட்டினார். அதன்படி கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர் என்ற விவரங்களை, அந்த வழக்கை நடத்திய திமுக மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் நாடாளுமன்றத்தில் கேட்டுப் பெற்றுள்ளார்.



அதன்படி, 2021 ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்த நடைமுறை அமலுக்கு வந்தபோது 4,422 ஓபிசி மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேர்ந்தனர். இதில் 2,633 பேர் முதுநிலை (PG) படிப்புகளிலும், 1,662 பேர் MBBS படிப்பிலும், 127 பேர் BDS படிப்பிலும் இடங்களைப் பெற்றனர்.

2022 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 4,907 ஆக உயர்ந்தது. அதில் 2,982 முதுநிலை, 1,804 MBBS மற்றும் 121 BDS சேர்ந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் 5,484 ஓபிசி மாணவர்கள் மருத்துவக் கல்வியில் சேர்ந்தனர். இதில் 3,295 முதுநிலை, 2,057 MBBS மற்றும் 132 BDS சேர்ந்துள்ளனர். 2024 ஆம் ஆண்டில் 5,694 ஒபிசி மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இதில் 3,425 முதுநிலை, 2,133 MBBS மற்றும் 136 BDS சேர்ந்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டில் 5,697 ஓபிசி மாணவர்கள் அகில இந்திய தொகுப்பில் இடஒதுக்கீட்டின் பயனை பெற்றனர். இதில் 3,404 முதுநிலை, 2,160 MBBS மற்றும் 133 BDS சேர்ந்துள்ளனர்.

இதன் மூலம் 2021 முதல் 2025 வரை மொத்தமாக 26,204 ஓபிசி மாணவர்கள் அனைத்திந்திய ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்வியில் சேர வாய்ப்பு பெற்றுள்ளனர். இதில் 15,739 முதுநிலை மருத்துவ இருக்கைகளும், 10,465 பட்டப்படிப்பு (MBBS மற்றும் BDS) இருக்கைகளும் அடங்குகின்றன.

## திராவிட மாடலும் குஜராத் மாடலும்!

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் கவனம் பள்ளிக் கல்வித்துறையில் தீவிரமாக இருந்தது. பல்வேறு திட்டங்கள் மூலமும் தொடர் சாதனைகளை செய்து வருகிறது. “இல்லம் தேடி கல்வி தொடங்கி, காலைச் சிற்றுண்டி, கலைத் திருவிழா, புதுமைப் பெண், தாயுமானவர் திட்டம், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், கல்விச் சுற்றுலா என ஏராளமான திட்டங்களை வகுத்து அதை சிறப்பாக நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டு கல்விக் கட்டமைப்பை அய்ரோப்பிய நாடுகளுக்கு இணையாக உருவாக்கி வருகிறது.

அரசின் தொடர் சாதனைகளால் தமிழ்நாட்டில் கடந்த 20 நாட்களில் 44,439 மாணவர்கள் அரசுப் பள்ளியில் சேர்ந்துள்ளனர். மேலும் கல்வியில் புதிய உச்சத்தை தொட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் சேர்க்கை 76% விழுக்காடக உயர்ந்துள்ளது. மாணவர்கள் சேர்க்கை 71% விழுக்காடாக அதிகரித்துள்ளது என ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக கல்விக் கட்டமைப்பை சீர்குலைத்து வருகிறது குஜராத் மாடல் பாஜக அரசு. தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. வகுப்பறை குறைபாடுகள், போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, ஆசிரியர்கள் பற்றாக்குறை என குஜராத் பள்ளிக் கல்வித்துறை திணறுகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பாஜக குஜராத்தை தொடர்ந்து ஆட்சி செய்து வருகிறது. பிரதமர் மோடியின் சொந்த மாநிலம் என்பதும் 2001–2014 வரை அவர் முதலமைச்சராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குஜராத் சட்டமன்றத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ எழுப்பிய கேள்விக்கு, பாஜக அரசு சார்பில் அளிக்கப்பட்ட பதிலில், மாநிலத்தின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.குஜராத் பள்ளிக் கட்டமைப்பு நெருக்கடி தீவிரமடைந்து வருவதால், கல்வித் துறையில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் குஜராத்தில் 75 பள்ளிகள் மூடப்பட்டன. அந்த பதிலில், மொத்தம் 9,442 வகுப்பறைகள் பற்றாக்குறை, மாணவர் சேர்க்கை இல்லாததால் 75 அரசு பள்ளிகள் மூடப்பட்டன. 2,674 பள்ளிகள் ‘ஷிப்ட்’ முறையில் இயங்கும் நிலை என முக்கிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 32 மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளிகளில் 8,586 வகுப்பறைகள் குறைவாகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 856 வகுப்பறைகள் பற்றாக்குறையாகவும் உள்ளதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை இல்லாமல் 75 அரசு தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக சட்டமன்றத்தில் பாஜக அரசு தெரிவித்துள்ளது.

அகமதாபாத் போன்ற நகரப் பகுதிகளிலும் இந்த பிரச்சினை இருப்பது, இது கிராமப்புறங்களுக்கான பிரச்சினை அல்ல என்பதைக் காட்டுகிறது. தற்போதைய நடவடிக்கைகள் இந்த பிரச்சினையை சமாளிக்க போதுமானதாக இல்லை என்பது தெரியவருகிறது. ஆகவே குஜராத் மாடல் பள்ளிகளுக்கு மூடுவிழா நடத்துகிறது. திராவிட மாடல் அரசு மாணவ, மாணவிகளை அரசு பள்ளிகளில் சேர்த்து சாதனை படைக்கிறது.

## ‘பெண்கள் பாதுகாப்பு’ தமிழ்நாட்டுக்குப் புகழாரம் சூட்டுகிறார் ஆர்.என்.ரவி!

அருணாச்சல பிரதேசம், மிசோரம் போன்ற மாநிலங்கள் உருவான தினவிழாவில் தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் ஆர்.என் ரவி பேசிய கருத்து சமூகவலைதளத்தில் பரவலாக பேசப்பட்டு வருகிறது. வடகிழக்கு பெண்கள் தமிழ்நாட்டிற்கு படிக்க சென்றால் அவர்கள் பெற்றோர்கள் எந்தக் கவலையும் இல்லாமல் தமிழ்நாட்டிற்கு அனுப்பலாம். தமிழ்நாடுபோல் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் கிடையாது. தமிழ்நாட்டு மக்கள் மிகவும் அக்கறையுடன், நண்பர்களாக நம்மை கவனித்துக் கொள்வார்கள். தமிழ்நாட்டைப் போல் டெல்லி போன்ற மாநிலங்களுக்கு பெண்களை அனுப்ப இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து விடைபெற்ற ஆளுநர் ரவிக்கு இந்த "அறிவு ஒளி" கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று புலம்பும் சங்கிகளுக்கு ஆளுநர் ரவியே பதில் கூறிவிட்டார்.



## பாஜகவுக்கு ஒரே நெருக்கடி திமுகதான்

**ஒன்றிய ஆட்சிக்குக் கடும் நெருக்கடிகளைத் தந்து வரும் ஒரே ஆட்சி திமுக ஆட்சி தான் என்று கோலாகல சீனிவாசன் என்ற பார்ப்பன பத்திரிகையாளர் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார். தீவிர ஆர்.எஸ்.எஸ்–க்காரான இவரது பேட்டி:**

அகில இந்திய அளவில் பாஜகவை எதிர்க்கக் கூடிய எதிர்க்கட்சிகளின் ஆட்சிகள் பல மாநிலங்களில் இருந்தாலும் ஒன்றிய அரசுக்குத் தலைவலியை தரக் கூடிய ஆட்சி திமுக ஆட்சிதான். சமீபத்தில் உச்சநீதிமன்றம் வழங்கியது ஆளுநர்களுக்கு எதிரான மிகவும் கடுமையான தீர்ப்பு. இந்த தீர்ப்பு ஒன்றிய அரசுக்கு விழுந்த அடி.

ஒரே நேரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி மூலமாக தலைவலி மேற்கு வங்கத்தில் வர உள்ளது. கேரளாவில் பினராயி விஜயனுக்கு உள்ளது. ஆனால் இவர்கள் மூலம் ஒன்றிய அரசுக்குத் தொந்தரவு இருந்ததே கிடையாது. ஆனால் திமுக மிகப்பெரிய தலைவலியாக உள்ளது. ஒவ்வொரு நாளும் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். மம்தா, பினராயைக் காட்டிலும் மோடி எதிர்ப்பில் வலுவாக உள்ளார் முக ஸ்டாலின்.

## தீர்வுதேடி தமிழ்நாடு வந்துள்ள உத்தரப்பிரதேசம்

மகப்பேறு விகிதத்தை குறைக்க தீர்வுகாண தமிழ்நாடு வந்துள்ளது உத்தரப்பிரதேச திட்டக்குழு. இங்கு செயல்பாட்டில் உள்ள சுகாதார நலத் திட்டங்கள் பற்றி விரிவாக ஆலோசனை நடத்தினர். தமிழ்நாடு வந்துள்ள அம்மாநில திட்டக் குழுவினர் இங்கு மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில் கள ஆய்வுகளில் ஈடுபட்டனர். பிரசவத்தின் போது அல்லது பிரசவம் முடிந்த 42 நாட்களுக்குள் இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை மகப்பேறு இறப்பு விகிதம் கணக்கிடப்படுகிறது. அதன்படி ஒரு இலட்சம் பிரசவத்தில் தமிழ்நாட்டில் 35 பேர் மட்டுமே உயிரிழக்கின்றனர். இது உ.பியில் 140–ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜாதி தேவை என்கிறது ஆர்.எஸ்.எஸ்!

ஜாதிக் கட்டமைப்பு நீடிக்க வேண்டும்; ஆனால் ஜாதிகளுக்குள்ளே நல்லிணக்கம் வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ் கொள்கை என்று அமைப்பின் தேசிய பரப்புரைத் தலைவர் சுனில் அம்பேத்கர் "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டிற்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார். ஜாதிவாரி கணக்கெடுப்பை ஆர்.எஸ்.எஸ் ஆதரிக்கிறது. ஆனால் அந்த கணக்கெடுப்பை அரசியலுக்கு பயன்படுத்தி சமூகத்தைப் பிளவுபடுத்தக் கூடாது என்றும் அவர் கூறினார்.



Politics shouldn't divide society: RSS on caste census

Manash.Gohain
@timesofindia.com

New Delhi: Drawing a line between welfare and politics on caste data, RSS national publicity head Sunil Ambekar said the Sangh backs caste census but opposes its use for "dividing society", even as he outlined the organisation's position on key debates from caste reform and women's participation to its equation with BJP.

In an interaction with TOI, Ambekar framed the RSS's approach to caste through social harmony rather than structural confrontation. "If mutual affection grows and discrimination disappears, even large issues can be resolved. Without harmony, even small issues become major conflicts," he said.

He said access to temples, cremation grounds, water sources and public spaces should be open to all, with RSS volunteers engaging at the local level to address such concerns. He pointed to institutions such as Vidya Bharati, Vanvasi Kalyan Ashram, Ekal Vidyalaya and Seva Bharati as part of a wider outreach network, adding that leadership is increasingly emerging from marginalised communities, including women.

On women's participation, Ambekar defended the parallel structure of Rashtriya Sevika Samiti, saying it mirrors the RSS shakha model. Addressing the RSS-BJP equation, Ambekar said the Sangh remains a social organisation focused on "building individuals", with swayamsevaks working across sectors, including politics.

ஒவ்வொரு ஜாதியும் மற்ற பிற ஜாதிகளுடன் நட்புடன் பழகி பாகுபாடுகளைத் தவிர்க்க வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ் கொள்கை என்றார். கோயில், சுடுகாடு, நீர்நிலை, பொது இடங்களில் ஜாதிப் பாகுபாடுகளை ஆர்.எஸ்.எஸ் சேர்க்கவில்லை என்றும் சுயம் சேவக்குகள் உள்ளூர் வட்டங்களில் இந்த பாகுபாடுகளை நீக்குவதற்கு செயல்படுகிறார்கள் என்றும் அவர் கூறினார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பெண்கள் சேர்க்கப்படுவது இல்லை; சுயம் சேவக்குகளாக பெண்கள் வர முடியாது என்ற கொள்கையில் ஆர்.எஸ்.எஸ் உறுதியாக இருக்கிறது என்பதை அவரது பேட்டி உறுதிப்படுத்தியது. ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு இணையாக "ராஷ்டிய சேவிகா சமிதி" என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதில் பெண்கள் சேரலாம் இதிலும் ஆர்.எஸ்.எஸ்-சில் இருப்பது போலவே சாகாக்கள் உண்டு என்றார் சுனில் அம்பேத்கர்.

**தலையங்கம்**

# உடல் உழைப்பு இழிவானதா?

40 சதவித மக்கள் இந்தியாவில் வேலை வாய்ப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்று அசிம்பிரேம்ஜி பல்கலைக்கழகம் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. 40 ஆண்டுகளாக வேலையில்லாத பிரச்சனை நீடித்து வருகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்துக்கான அடிப்படை காரணங்களாக இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ள கருத்து மிகவும் முக்கியமானது. மூளையை பயன்படுத்தி செய்யும் வேலை மரியாதைக்குரியதாகவும், உடல் உழைப்பு வேலை இழிவாகவும் கருதும் மனநிலைதான் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கான அடிப்படையான காரணம் என்று சுட்டிக் காட்டுகிறது இந்த ஆய்வு. ஜாதிக் கட்டமைப்பும் வர்க்க வேறுபாடுகளும் இதற்கு அடிப்படையான காரணம் என்றும் கூறுகிறது.

நடுத்தர வர்கத்தினரும் அதை நோக்கி செல்லத் துடிப்பவரும் மூளை வேலைகளை உயர்வாகவும் உடல் உழைப்பு வேலைகளை இழிவாகவும் கருதுவதாக அந்த ஆய்வு மேலும் கூறுகிறது. இதற்கு ஜாதி வர்க்கப் பார்வையில் இருந்து சமூகத்தை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்க முடியும் என்று ஆய்வு சுட்டி காட்டியிருப்பது மிகச் சரியான கருத்தாகும்.

பார்ப்பனியம் உருவாக்கிய ஜாதிக் கட்டமைப்பு வேலைகளை ஜாதியோடு இணைத்தது. ஒவ்வொரு ஜாதிக்கும் குலத் தொழிலை நிர்ணயித்தது. "சூத்திர பஞ்சமர்கள்" உடல் உழைப்பு சந்தையில் தள்ளப்பட்டனர். அவர்கள் செய்த தொழில்களையும் இழிவு செய்தார்கள். வேதக் கல்வியையும் அதை மனப்பாடமாக மூளையில் ஏற்றிக் கொள்வதையும் பார்ப்பனர்கள் தங்களுக்கான பிறப்புரிமையாக்கிக் கொண்டார்கள். வேத பார்ப்பனிய சிந்தனைகள் சமூகமயமாக்கப்பட்டன. பல நூறு ஆண்டுகளைக் கடந்தாலும் சமூக மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அதன் அடித்தளம் இப்போதும் உறுதியாகவே இருக்கிறது.

இதற்கு ஒரு சான்று கூற முடியும். சமூகத்தின் உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை தேவைகள் மூன்று . "உணவு-உடை-வீடு" இந்த மூன்று துறை உற்பத்தியில் பார்ப்பனர்கள் பங்களிப்பு என்ன?

உணவுக்கான விவசாயஉற்பத்தியில் எங்கேயாவது ஒரு "பிராமணனை" காட்ட முடியுமா?

கண்டதுண்டா? கண்டதுண்டா? ஏர்பிடித்த "பிராமணனை"க் கண்டதுண்டா? என்ற பெரியார் இயக்கத் தோழர்களின் கேள்விக்கு இதுவரை பதில் இல்லை!

வீடு கட்டும் கட்டுமான தொழிலில் 'பிராமணர்கள்' பங்களிப்பு உண்டா?' இதைத்தான் பெரியார் தொண்டர்கள் "சித்தாளும்,கொத்தாளும் நம்மாளு;சீனியர் ஆபிஸர் அவாளு" என்று மக்கள் மொழியில் கேள்வி கேட்டனர்.

அதேபோல் ஆடை தயாரிக்கும் நெசவுத் தொழில்களில் 'பிராமணர்களை'க் கண்டுபிடிக்க முடியாது. இவற்றில் ஆராய்ச்சியாளராக பார்ப்பனர்கள் இருப்பார்கள் ஆனால் உற்பத்திக்கு வர மாட்டார்கள்.

அதே நேரத்தில் கடவுளை நெருங்கக்கூடிய அர்ச்சகர் தொழிலை பார்ப்பனர்கள் தங்களுக்கு மட்டுமே உடைமையாக்கிக் கொண்டார்கள். கோயிலுக்கு வரும் பிரதமரும் குடியரசுத் தலைவரும் இவர்களுக்கு தலை வணங்க வேண்டும்.

இப்போதும் தூய்மைப்பணியில், மூட்டை சுமக்கும் வேலையில் ஒரு 'பிராமணனையும்' பார்க்க முடியவில்லை.

உழைக்கும் பாட்டாளி வர்க்கத்துக்காக போராடுவதாகக் கூறும் பொதுவுடைமைக் கட்சிகள் இந்த சமூக வரலாற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை . உலக நாடுகளின் தொழிலாளர்கள் பாட்டாளிகளைப் போல இந்தியாவையும் பார்த்தார்கள். அதற்கு அடித்தளமாக இருக்கும் ஜாதிக் கட்டமைப்பை பார்க்க மறுத்தார்கள். உண்மையிலேயே இந்த பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு இருப்பார்களானால் முதலாளி சுரண்டலோடு பார்ப்பன சுரண்டல் எதிர்ப்பையும் தங்கள் கொள்கையாக இணைத்திருப்பார்கள். மாறாக பார்ப்பன எதிர்ப்பை "வகுப்பு வாதம்" என்று புறந்தள்ளினார்கள்;

1954-ல் தொடக்கப் பள்ளி மாணவர்களை ஜாதித் தொழிலுக்கு தள்ளினார் அன்றைய முதல்வர் ராஜகோபாலாச்சாரி என்ற பார்ப்பனர்; "பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராகட்டும்" என்று பெரியார் ஆவேசத்துடன் களம் இறங்கியதால் தடுத்து நிறுத்தப்பட்டது. இப்போது நிலை மாறிவிட்டதா? அதே திட்டத்தை ஒன்றிய பாஜக ஆட்சி 'விஸ்வகர்ம' திட்டமாக இப்போது அறிவித்தது; தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி தான் இதை அமல்படுத்த மறுத்தது. இதற்கு மாற்றாக ஜாதி அடையாளங்களை தகர்த்து கலைஞர் கைவினைத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.

உடல் உழைப்புத் தொழில் மீதான கீழ்மையான பார்வையை மாற்றி அமைக்க தொழில்திறன் பயிற்சிகளை பெரும் அளவில் உருவாக்கி உடல் உழைப்பு மீதான மதிப்பீடுகளை உருவாக்க வேண்டும் என்கிறது பிரேம்ஜி பல்கலைக்கழக ஆய்வறிக்கை. தமிழ்நாடு முதல்வரின் " நான் முதல்வன் திட்டம்" இந்த நோக்கில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதோடு லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருக்கிறது. மூளை வேலை என்றாலும் உடல் உழைப்பு வேலை என்றாலும் சமநிலை ஊதியம் வழங்கப்பட வேண்டும். ஒரு காலகட்டம் வரை உடல் உழைப்பு வேலைக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்பட வேண்டும். தூய்மைப் பணியாளர்களுக்கும் கல்லூரி போராசிரியர்களுக்கு ஒரே ஊதியம் வழங்கப்படுவது குறித்து ஆட்சியாளர்கள் பரிசீலிக்க வேண்டியது அவசியம். ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் டாக்டர்களை விட வாகன ஓட்டுநர்களுக்குக் கூடுதல் ஊதியம் வழங்கப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறோம்!

# சனாதனமும் கோயில் நுழைவும்!

*பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் கோயில் நிர்வாகக் குழு தனது கட்டுப்பாட்டில் உள்ள 45 கோயில்களில் "இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரை அனுமதிப்பதில்லை" என்று முடிவு எடுத்துள்ளது.*

*பாலிவுட் நடிகையான சாரா அலிகான் இந்தக் கோயிலில் தரிசனம் செய்ய அனுமதி கேட்டார்; அதற்கு பதில் அளித்துள்ள கோயில் தலைமை நிர்வாகி ஹேமந்த் திரிவேதி "தனக்கு சனாதன தர்மத்தில் நம்பிக்கை உண்டு" என்று விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு தந்தால் அனுமதிக்கப்படுவார் என்று கூறியுள்ளார்.*

*இந்து அல்லாதோர் கோயில்களுக்குள் தரிசனம் செய்ய விரும்பினால் சனாதன தர்மத்தில் நம்பிக்கை இருக்கிறது என்று உறுதிமொழி விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு தர வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.*

*இந்துக் கடவுள் மீது நம்பிக்கை உண்டு என்று கூறவேண்டிய தேவையில்லை. மாறாக சனாதான தர்மத்தின் மீது அதாவது வர்ணாசிரம தர்மத்தின் மீது நம்பிக்கை உள்ளது என்று கூற வேண்டுமாம்.*

### *சனாதனம் என்றால் என்ன?*

*வடக்கில் இமயமலை முதல் தெற்கில் விந்திய மலைத்தொடர் வரையிலும்; கிழக்கில் வங்காள விரிகுடா முதல் மேற்கில் அரபிக்கடல் வரையிலான பகுதிகளை 'ஆரியவர்த்தம்' என மனுதர்ம சாஸ்திரம் முதல் ஸ்ரீமத் பாகவதம் போன்ற சனாதன நூல்கள் குறிப்பிடுகின்றன.*

*இந்த ஆரியவர்த்தம் எனும் பண்டைய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் மதம், ஒழுங்கு, நீதி மற்றும் தத்துவ மரபைக் குறிக்கும் சொல்லாக சனாதன தர்மம் விளங்குகிறது. சனாதன தர்மத்திற்கு ஆரிய மதம், வைதீக மதம், வேத மதம், பிராம்மணீய மதம் எனும் பெயர்களும் உண்டு. சனாதன தர்மத்திற்கு பிரமாண நூல்களாக நான்கு வேதங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட உபநிடதங்கள், இரு இதிகாசங்கள், 18 புராணங்கள், 18 உப புராணங்கள், 18 தர்ம சாஸ்திர நூல்கள், நூற்றுக்கும் மேற்பட்ட ஆகம நூல்கள் மற்றும் பல சாஸ்திர நூல்களும் விளங்குகின்றன. இந்த நூல்களில் கூறப்படும் வாழ்வியல் முறைகளைக் கடைப்பிடிப்பவர்களே சனாதனிகள் என அறியப்படுகின்றனர்.*

*சனாதன தர்மத்தின் அடிப்படை என்பது தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனும் 'புருஷார்த்தம்' ஆகும். புருஷன் எனும் ஆண் பற்றிய விசயம் என்பதால்தான் பெயரே 'புருஷார்த்தம்' என சனாதனிகள் குறிப்பிடுகின்றனர். இதில் பெண்களுக்கு எனத் தனியே ஒரு காரியமும் (சம்ஸ்காரம்), உரிமையும் இல்லை. ஆண் துணையில்லாமல் பெண்ணிற்கு தனியே மோட்சம் இல்லை என்பதுதான் சனாதனத்தின் முடிவு!*

*இந்த உடலானது அழியக்கூடியது, அதனுள் இருக்கும் ஆத்மா அழிவற்றது. அது உடலைப் பிரிந்து மறுபிறவிகள் எடுப்பதென்பது, செய்யும் கர்ம வினைகளைப் பொறுத்தது. இந்த ஆத்மாவின் பயணம் தர்மம், அர்த்தம், காமம் இவற்றைத் தாண்டி மறுபிறப்பு எனும் சுழற்சியில் உழன்று மோட்சம் அடையும் வரை தொடரும் என்பதே இதன் உள்ளார்ந்த அர்த்தம் .*

*சனாதன நூல்களான வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள். தர்ம சாஸ்திரங்கள், உபநிடதங்களின்படி 'ஆரியவர்த்தம்' எனக் கூறப்படும் நிலப்பரப்பே உலகில் புண்ணிய பூமி ஆகும்.*

*இந்த நிலப்பரப்பிற்கு வெளியே பிறக்கிறவர்கள், வாழ்கிறவர்கள் அனைவரும் புற மதத்தினர் அல்லது மிலேச்சர்கள் என சனாதன நூல்கள் சித்தரிக்கின்றன. புண்ணிய பூமியான ஆரிய வர்த்தத்தில் பிறக்கிறவர்களை நான்கு முக்கிய பிரிவுகளாக சனாதன நூல்கள் பாகுபடுத்துகின்றன. அவையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் மற்றும் சூத்திரர் எனும் நான்கு வர்ணங்கள். பெண்களுக்கு வர்ணம் ஏதும் இல்லை. அவர்கள் எந்த எந்த வர்ணத்து ஆண் குடும்பத்தில் பிறக்கிறார்களோ அந்த வர்ணத்தைச் சார்ந்த பெண்களாக இன்றளவும் அறியப்படுகின்றனர்.*

*நான்கு வர்ணங்களைத் தாண்டி வர்ணத்தைச் சாராதவர்கள் எனும் 'அவர்ணர்கள்'எனும் பிரிவினரையும் சனாதன நூல்கள் குறிப்பிடுகின்றன. இவர்களை வர்ணமற்றவர்கள் என்றும் பஞ்சமர்கள், சண்டாளர்கள், அந்த்யஜர்கள் (பாப ஜென்மங்கள்), புலையர்கள், நிகிருஷ்டர்கள், விராத்தியர்கள் எனும் தீண்டத்தகாதவர்கள் என சனாதன நூல்கள் குறிப்பிடுகின்றன.*

# பாலியல் கொலையாளிக்கு துணைபோகிறதா காவல்துறை?



*கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டியில் 11.12.2025 அன்று இரண்டரை வயது பெண் குழந்தை சாதிய மற்றும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளியை உடனடியாக கைது செய்யாமலும், சட்டப்படியான சரியான விசாரணையை மேற்கொள்ளாமலும் அஞ்செட்டி காவல் நிலைய ஆய்வாளர் சுமித்ரா மிகுந்த அலட்சியமாக செயல்பட்டு வந்தார்.*

*அதனால் காவல் ஆய்வாளர் சுமித்ராவையும், இவ்வழக்கில் வேறு யாரேனும் சம்மந்தப்பட்டிருந்தால் அவர்களையும் விசாரித்து கைது செய்ய வேண்டும் என 17.03.2026 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, சமூக செயல்பாட்டாளர் பியூஷ் மானுஷ், செய்தியாளர் சிவசுப்ரமணி, சமூக செயல்பாட்டாளர் சுரேஷ், செய்தியாளர் சிவகுரு மற்றும் பாதிக்கப்பட்டு இறந்த பெண் குழந்தையின் தந்தை வீட்டார் முறையிட்டனர். இதில் திராவிடர் விடுதலைக் கழக கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட, ஒன்றிய, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.*

# தேர்தல் களம்; மக்களிடம் கூறுவோம்

**தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:**

### சட்டம் ஒழுங்கு மீறலா? சமூக ஒழுங்கு மீறலா?

"என்.டி.ஏ. கூட்டணியை ஒரே மேடையில் ஏற்றி ஒற்றுமையை மக்களுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த போராட்டம் தான் "சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கான ஆர்ப்பாட்டம்". ஆனால் இந்தப் போராட்டம் கூட்டணியின் ஒற்றுமைக்கு வேட்டு வைத்துவிட்டது. திமுக எதிர்ப்பு இப்போது அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மற்றும் திண்டுக்கல் சீனிவாசன் எதிர்ப்பாக உருமாறி விட்டது. கூட்டணிக் கட்சியான பாஜகவினரே அதிமுக சண்முகத்தை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். சொந்தக்காசில் சூடு வைத்த கதை தான்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தைவிட திமுக ஆட்சிக் காலத்தில் குற்றங்கள் குறைவு என்று புள்ளி விவரங்களுடன் உள்துறை செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார். நடப்பது எந்த ஆட்சியாக இருந்தாலும் நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, வன்முறை, பாலுறவு வன்கொடுமை குற்றங்களுக்கு ஆட்சியை குற்றம் சாட்டுவது நியாயமும் இல்லை.அர்த்தமும் இல்லை என்பதே நமது உறுதியான கருத்து. இவை அனைத்தும் சமூகம் சார்ந்த குற்றங்கள் வன்முறைகள். நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து தடுக்கக்கூடிய "மந்திரக் கோல்" எந்த அரசிடமும் இல்லை.இருக்கவும் முடியாது. குற்றம் நடந்த பிறகு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் தான் தவறு. அப்படி எந்தக் குற்றச்சாட்டையும் இந்த ஆட்சியின் மீது கூறி விட முடியாது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலுறவு வன்முறையில் ஈடுபட்ட குற்றவாளியை திமுகவுடன் இணைத்து பேசினார்கள். ஆனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆயுள் தண்டனையை நீதிமன்றம் வழியாக மிகக் குறுகிய காலத்தில் பெற்றுத் தந்திருக்கிறது தமிழ்நாடு அரசு. ஆனால் பொள்ளாச்சி கூட்டுப் பாலுறவு வன்முறை வழக்கில் சொந்த கட்சிக்காரரை காப்பாற்றுவதற்கு எடப்பாடி ஆட்சி முயன்றதையும் குற்றச்சாட்டுக்களை காவல் நிலையத்தில் பதிவுசெய்யாமல் காலம் கடத்தியதையும் நாடு பார்த்தது. நாட்டின் வளர்ச்சிக்கான மக்களின் எதிர்காலக் கனவுகளை ஒரு மக்கள் தலைவராக அறிய விரும்பினார் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின். ஆனால் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி சண்முகத்துக்கு அது படுக்கை அறை கனவாகவே தெரிந்தது. இது அவருடைய வக்கிர புத்தி. இதே போன்ற வக்கிர மனநிலையாளர்களால்தான் சமூகத்தில் பாலுறவு வன்முறைகளும் குழந்தைகள் மீதான வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த குற்றங்களுக்கும் ஆட்சிக்கும் நேரடி தொடர்பு இல்லை என்பதற்கு சண்முகமே பதிலாகவும் சாட்சியாகவும் நிற்கிறார். திமுகவினரே மக்களிடம் போய் நீங்கள் குற்றச்செயலில் இறங்குங்கள். நாங்கள் காப்பாற்றுகிறோம் என்று கூறுவதைப் போல இருக்கிறது இவர்களின் குற்றச்சாட்டு. நாட்டில் நடக்கும் குற்றங்கள் சமூக ஒழுங்கு மீறல்களே. இந்த சமூக ஒழுங்கு மீறல்கள் வழியாக மக்களே சட்டம் ஒழுங்குகளை சீர்குலைக்கிறார்கள். ஆட்சி சீர்குலைக்கவில்லை. மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு என்பது வேறு! பொது ஒழுங்கு சீர்கேடுஎன்பது வேறு!

மணிப்பூரில் நடப்பது பொது ஒழுங்கு சீர்கேடு. ஆட்சி நிர்வாகமே முடங்கிக் கிடக்கிறது. இந்த ஆட்சியை கலைப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் அனைத்து மாநிலங்களிலும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூக குற்றங்களை அரசின் மீது ஏற்றி ஆட்சியாளர்களை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற துடிப்பது அற்ப அரசியல் அர்த்தமற்ற அரசியல். திராவிட மாடல் ஆட்சியை கண்டிப்பதற்கு இவர்களுக்கு இதை விட்டால் வேறு பிரச்சனையே இல்லை. சரி.என்.டி.ஏ அணியோ, த.வெ.கவோ அதிகாரத்துக்கு வந்தால் கொலையோ, கொள்ளையோ, பாலுறவு வன்முறையோ நடக்கவே நடக்காது என்று இவர்களால் அறிவிக்க முடியுமா? தேர்தல் அறிக்கையில் அறிவிப்பார்களா?

"இந்தக் கூட்டத்தில் எவராவது ஒழுக்க சீலர் இருந்தால் இந்த பெண்ணின் மீது கல்லை எறியலாம்" என்று இயேசுநாதர் சொன்னதாக் கூறப்படும் கதைதான் நினைவுக்கு வருகிறது.

### மாப்பிள்ளை பாஜகதான்; ஆனால் சட்டை என்னுடையது

அதிமுக பாஜக கூட்டணியை அமித் ஷாதான் அறிவித்தார்; இப்போது கூட்டணிக்கான தொகுதி பங்கீடுகளை எடப்பாடி பழனிச்சாமி தனது கட்சி அலுவலகத்தில் அறிவித்திருக்கிறார். இதன் மூலம் கூட்டணிக்கான தலைமை தனது கட்சிதான் என்றும் பாஜக அல்ல என்றும் மக்களுக்கு சூசகமாக கூறுகிறார். பாஜக என்ற அடையாளத்தை முன்னிறுத்தினால் தமிழ்நாட்டு மக்கள் அதை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்; இந்த உண்மை கட்டாயத்தின் பேரில் கூட்டணியில் இணைக்கப்பட்ட எடப்பாடிக்கு நன்றாகவே புரிந்திருக்கிறது.







இதன் காரணமாகவே கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜக அணியில் சேர மறுத்தார்; இதன் காரணமாகவே இந்த தேர்தல் களம் திமுகவுக்கும் அதிமுகவுக்கும் போட்டி என்று சித்தரிக்க விரும்புகிறார் எடப்பாடி. விருப்பமில்லாமல் பாஜக என்ற லக்கேஜை சுமக்க வேண்டி இருக்கிறது என்ற குமுறல்களின் வெளிப்பாடு இது! இந்த தேர்தலில் வெற்றி பெறப்போவது திமுக அணிதான் என்று அமித் ஷாவே தன்னிடம் ஒப்புக்கொண்டதை ஓபிஎஸ் பொதுவெளியில் போட்டு உடைத்து விட்டார். இதற்கு அமித் ஷா -விடமிருந்து எந்த மறுப்பும் வரவில்லை. இப்போது தனி மெஜாரிட்டியுடன் அதிமுகவே ஆட்சி அமைக்கும் என்று எடப்பாடி கூறுவதன் வழியாக அமைச்சரவையில் பாஜக இடம்பெறாது என்ற உறுதியையும் மக்களுக்கு மறைமுகமாக வழங்குகிறார். இந்தத் திரைக்கதைகளை மக்கள் நம்புவார்களா?

முதலமைச்சராக இருந்து இவர் நடத்திய ஆட்சியை இயக்கியதே ஒன்றிய பாஜக ஆட்சி தான். முத்தலாக் சட்டம்; குடியுரிமை சட்டம்; விவசாய சட்டம்; காஷ்மீர் சிறப்பு சட்டம் ரத்து; டெல்லி மாநில உரிமைப் பறிப்பு சட்டம் என்று அனைத்து மாநில உரிமை பறிப்பு மற்றும் மதவாத சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது எடப்பாடி ஆட்சி.

★ ஜெயலலிதா கையெழுத்திட மறுத்த உதய் மின் திட்டம் மற்றும் உணவு பாதுகாப்பு மசோதாவுக்கும் பச்சைக்கொடி காட்டினார்கள்.

★ நீட் விலக்கு கோரி எடப்பாடி அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்தை குடியரசு தலைவர் ஏற்க மறுத்து எழுதிய கடிதத்தை மக்களிடம் வெளிப்படுத்தாமல் ரகசியமாக பாதுகாத்தது எடப்பாடி ஆட்சி.

★ தமிழ்நாட்டில் மத கலவரத்தை தூண்டும் பாஜகவின் அத்தனை முயற்சிகளுக்கும் துணை போனவர் எடப்பாடி.

★ ஆர்.எஸ்.எஸ் மாநாட்டுக்கும் இந்து முன்னணி மாநாட்டுக்கும் தனது கட்சியின் சார்பில் தூதுவர்களை அனுப்பினார்.

★ திருப்பரங்குன்றத்தில் மதக் கலவரத்தை உருவாக்க பாஜக மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார்; எல்லைக்கல்லில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பை திமுக அமல்படுத்தவில்லை என்று கன்னடம் தெரிவித்தார்.

★ என்.டி.ஏ மாநாட்டின் முகப்பில் இடம்பெற்ற பெரியார் படத்தை பாஜக நீக்கிய போதும் வாய் திறக்கவில்லை.

★ மாநில உரிமைகளை பறிக்க முயன்ற ஆளுநர் ஆர்என்.ரவியின் அடாவடிகளுக்கும் துணை போனார். இப்படி நீண்ட பட்டியலிட முடியும்.

பாஜகவின் நிழல் ஆட்சியை தமிழ்நாட்டில் நடத்திக் காட்டியவர் எடப்பாடி பழனிச்சாமி. இப்போது தனது தலைமையிலான கூட்டணியில் தான் பாஜக இருக்கிறது என்று படம் காட்டுவதை மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள். மாப்பிள்ளை பாஜகதான்; ஆனால் சட்டை என்னுடையது என்ற டயலாக் தான் நினைவுக்கு வருகிறது!

## தாய்கிழவி பேசும் மகளிர் "உரிமைத் தொகை"




பாட்டியை கதையின் நாயகியாக்கி வெளிவந்துள்ள "தாய் கிழவி" திரைப்படம் மக்களின் பேராதரவோடு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நடிகை ராதிகா மிகச்சிறப்பான குணச்சித்திர கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார். தனது தந்தை நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களுடைய நடிப்பை அப்படியே பிரதிபலித்து இருக்கிறார்.

பாட்டி தன்னுடைய சொந்த உழைப்பில் நகைகளையும் பணத்தையும் ஈட்டி வட்டிக்கு விடுகிறார். பாட்டி 160 பவுன் நகைகளை தனது கடையில் வாங்கினார் என்று ஒரு மனநோயாளி நகைக்கடைக்காரர் பொய்யாகக் கூறியதை நம்பி அவரது 3 மகன்களும் பாட்டியிடம் இருந்து நகையை தட்டிப் பறிக்கும் சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். அந்த மூன்று மகன்களில் ஒருவர் கமல்ஹாசன் ரசிகர்; மற்றொருவர் கருப்பண்ண சாமியின் தீவிர பக்தர்; மற்றொருவர் ஆட்டோ தொழிலாளி. பாட்டியிடம் இருந்து நகைகளை பறிக்க இவர்கள் அரங்கேற்றும் திட்டங்கள் அத்தனையும் தற்குறித்தனமானவை. இடையில் நோய்வாய்ப்பட்டு பாட்டி படுத்த படுக்கையாகி விடுகிறார். அப்போது மூன்று விரல்களை அவர் காட்டிக் கொண்டிருக்கிறார். அந்த மூன்று விரல்களும் அவரது நகைகள் எங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை குறிப்பால் உணர்த்துவதாக இவர்கள் நம்புகிறார்கள்.

முதலில் தாய் மரணத்திற்கு முயற்சிக்கிறார்கள்; பிறகு பிழைத்து வர வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள்; படுத்த படுக்கையில் இருந்த பாட்டியை மருத்துவமனையில் சேர்த்து அதற்காக மனைவிகளிடம் இருந்து நகைகளை வாங்கி அடகுவைத்து செலவு செய்கிறார்கள். படுக்கையில் விழுந்த பாட்டி பிறகு உயிர் பிழைத்து வருகிறார். தான் பாதிக்கப்பட்ட போது அந்த மூன்று விரல்களை நீட்டியது வீட்டில் இருந்த மூன்று பிளேடுகளை கொண்ட மின்விசிறி சுவிட்சை ஏன் அணைக்கவில்லை என்பதற்குதான் என்று பாட்டி விளக்கம் தருகிறார். ஊதாரி மருமகனிடமிருந்து தன்மகளை பிரித்து மறுமணம் செய்து வைக்கிறார். இறுதியாக தான் சேர்த்து வைத்த நகைகளை தன்னுடைய மகன்களுக்கு கொடுக்காமல் மகளுக்கும், மருமகள்களுக்கும் அவர் கொடுத்துவிட்டு பேசுகிறார். படத்தின் இறுதிகாட்சியில் 'தாய்கிழவி' இவ்வாறு கூறுகிறார்.

**"படைக்க, காக்க, அழிக்க என்று அத்தனையும் ஆம்பளையை கும்பிடச் சொன்னதே பெண் தான். பணத்துக்கும் படிப்புக்கும் பெண் தெய்வத்தை தான் கும்பிட சொல்கிறார்கள். ஏனா ஆறை நூறாக்குவதும் பெண்தான் என்று ஆம்பளைக்கே தெரியும். பிழைக்குற பொழைப்புக்குதான் ஒரு பொம்பளைக்கு சுதந்திரம் வேணும். அது மட்டும் இருந்தால் மற்ற சுதந்திரத்தை உனக்கு யாரும் தர வேண்டிய அவசியமில்லை. அப்படி நான் அனுபவித்த சுதந்திரம் தான் 60 வயதில் நான் புரிஞ்சுகிட்ட சுதந்திரம், 30 வயதில் என் மகளுக்கு கிடைத்த சுதந்திரம், 18 வயதில் என் பேத்திக்கு கிடைக்க போகிற சுதந்திரம் நாளைக்கு அவள் மகள் பிறக்கும் போது கிடைத்துவிடும்.**

**கைல கிடைக்கிற காசை செலவுக்கு போக நாளைக்கு கொஞ்சம் னு சேர்த்து வைத்து வந்தோம்னா ஒரு நாள் ஏதாவது ஒன்னு நடந்து எதிர்பாராமல் வெறும் கையில் நிற்கிற நேரம் வரும் போது பெண்கள் சேர்த்து வைத்த சேமிப்பு அவர்களுக்கு கைகொடுக்கும். ஒரு மனிதன் சந்தோஷமா இருக்கிறதுக்கு காசு வேணுமானு எனக்கு தெரியாது. ஆனா மரியாதையாக இருப்பதற்கு காசு வேணும்".**

தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தல் களத்தோடு பொருந்தி நிற்கிறது இந்த திரைப்படம். தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் கொண்டு வந்த "உரிமைத் தொகை" திட்டத்தின் நியாயங்களைத்தான் தாய்க்கிழவி பேசுகிறார். அதே போல் திரைப்பட நாயகர் பிம்பங்களில் மூழ்கிக் கொண்டும், குலதெய்வ நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் தற்குறித்தனத்தையும் சேர்த்து அம்பலப்படுத்துகிறது இந்த தாய்க்கிழவி திரைப்படம்! – **இரா**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கோவை, திருப்பூரில் அனல் பறந்த தேர்தல் பிரச்சாரம்!

**திருப்பூர்: மார்ச்04 (4வது நாள்):** கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையிலும் முகில் இராசு மாவட்டத் தலைவர் முன்னிலையிலும் "தொடரட்டும் தமிழ்நாட்டின் சாதனைகள், திமுக அரசை உறுதி செய்வோம்" என்ற தலைப்பில் 4வது நாளாக 04.03.2026 அன்று காங்கேயம், பேருந்து நிலையம், வெள்ளக்கோவில் பகுதியில், முத்தூர் (மூன்று சந்திப்பு சாலையில்), நத்தகாடையூர் ஆகிய பகுதிகளில் தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றன.




**மார்ச்-05 (5வது நாள்):** தாராபுரம், வட தாரை பகுதி, தாராபுரம் அய்ந்து முக்கு சாலை, தாராபுரம், அண்ணா சாலை, தாராபுரம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஈரோடு இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்), சூலூர் பன்னீர்செல்வம் (தலைமைக் குழு உறுப்பினர்), பரிமளராசன் (சமூக வலைதளப் பொறுப்பாளர்), முகில் இராசு (மாவட்டத் தலைவர்), சங்கீதா (மாவட்ட அமைப்பாளர்), முத்து (மாநகர அமைப்பளர்), கவி பு.இ.மு காங்கேயம் பகுதி பொறுப்பாளர், ஆறுமுகம் ஆசிரியர் (தி.க காங்கேயம் ஒன்றியத் தலைவர்) கதிர்வன் (தாராபுரம் பகுதியின் திமுக நகர அமைப்பாளர்) தொடங்கி வைத்தார். கணக்கன் (மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். திமுக நகர தொண்டர் அணி அமைப்பாளர் சாஜகான் கலந்து கொண்டு சிறப்பித்தார். அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), சரசுவதி (மாநகர அமைப்பாளர்) சென்னிமலை செல்வராஜ் (ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர்), சிவானந்தம் (மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர்), கடத்தூர் அய்யப்பன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

மாரிமுத்து (மாநகர துணைத் தலைவர்), சரஸ்வதி (மாநகர அமைப்பாளர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), சிரிஜா ஆகியோர் கலந்து கொண்டனர். தராபுரம் நிகழ்வை மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் நெறியாளுகை செய்தார், மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சிவானந்தம் அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தார். தோழர் ராசாமணி இல்லத்தில் தாராபுரம் வழக்கறிஞர் கிருட்டிண குமார் அவர்களால் தோழர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை வெகுவாக பாராட்டி பொது மக்கள் ரூ.4780 நன்கொடையாக வழங்கினார்கள்.

**கோவை:** 07.03.2025.சனிக்கிழமை காலை சின்னியம்பாளையம் பேருந்து நிலையம், உப்பிலிபாளையம் பூங்கா திடல் பேருந்து நிறுத்தம், சவுரிபாளையம் மூன்று வீதி சந்திப்பு, பீளமேடு ரொட்டிக் கடை மைதானம் ஆகிய பகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன. சிவராஜ், உக்கடம் கிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரிமளராசன் (சமூக வலைதளப் பொறுப்பாளர்), முத்து (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), நிர்மல்குமார் (கோவை மாநகரத் தலைவர்) ஆகியோர் கருத்துரையாற்றினர்.




பன்னீர் செல்வம் (மாவட்டச் செயலாளர்), ந. தமிழ்ச்செல்வி (கோவை மாவட்ட அமைப்பாளர்), சங்கீதா (திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் ), தரணி, வழக்குரைஞர், சரவணகுமார், சாம்விஜய், ஓட்டுநர் ரமேஷ் சவுரிபாளையம் க.மணிகண்டன் (51 வது வட்டக் கழகச் செயலாளர்), இல.மோகன்ராஜ் (51வது வட்டச் செயலாளர்), லோ.கார்த்தி (இளைஞரணி அமைப்பாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர். தோழர்களுக்கு வழக்குரைஞர் சரவணகுமார் கரும்புச் சாறு வழங்கினார். மதிய உணவு தோழர் சிவராஜ் ஏற்பாடு செய்து கொடுத்தார். திமுக தோழர்கள் கலந்து கொண்டு தோழர்களுக்கு தேனீர் வழங்கினார்கள். இரவு உணவு கிருஷ்ணன் வழங்கினார். உப்பிலிபாளையம் கூட்டத்தில் திமுக தொண்டர் பெரியவர் நிகழ்ச்சி பார்த்து தோழர்களுக்கு குளிர் பானம் வழங்கினார்.

**மார்ச்-14:** கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட் சிட்டி பேக்கரி முன்பு 14.03.2026 மாலை 6 மணி அளவில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார் தலைமை தாங்கினார். மாநகரச் செயலாளர் வெங்கட், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகர அமைப்பாளர் நவீன் கலந்து கொண்டு உரையாற்றினர். இராஜலட்சுமி நன்றி கூறினார். மாநகரத் தோழர்கள் தரணி சத்தியமூர்த்தி கிருஷ்ணன் கதிரவன் கலந்து கொண்டனர். பகுதி மக்களுக்கு துண்டறிக்கை வழங்கப்பட்டது.

## ஜாதிப்பெருமை நூல் அறிமுக விழா!

**மதுரை:** திராவிடர் விடுதலைக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சி இணைந்து ஜாதிப் பெருமை நூல் அறிமுக கூட்டம், மதுரையில் உள்ள மணியம்மை பள்ளியில் 08.03.2026 நடைபெற்றது.



ஊடகவியலாளர் சத்யராஜ் குப்புசாமி, கனியமுதன் (விசிக துணைப் பொதுச் செயலாளர்), பேரறிவாளன் (தமிழ்ப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர்) மற்றும் பிரபாகரன் (புஇமு) ஆகியோர் புத்தகத்திற்கான கருத்துரை நிகழ்த்தினார்கள். காமாட்சி பாண்டியன் (மதுரை மாவட்டத் தலைவர்) வரவேற்புரை ஆற்றினார். தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சி தலைவர் மணிபாபா தலைமையில் நடைபெற்றது. மதுரைச் சேர்ந்த அனைத்து ஜனநாயக இயக்கங்களும், பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய தோழர்களும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வினை தோழர் தவம் அறக்கலம் வலையொலி (YouTube) பதிவு செய்து வெளியிட்டு உள்ளார். குமரன் (புஇமு) நன்றி கூறினார்.

## ஸ்ரீராம்–காயத்ரி ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பு விழா!

சேலம் மாவட்டம் R.T.கிருஷ்ணன் - கவிதா ஆகியோரின் மகன் ஸ்ரீராம் அவர்களுக்கும், சென்னை மாவட்டம் R.சிவகுமார் - சாந்தகுமாரி ஆகியோரின் மகள் காயத்ரி அவர்களுக்கும், 15.03.2026 ஞாயிறு மாலை 6.00 மணியளவில் அயோத்தியாபட்டினம் வாசு மஹால் திருமண மண்டபத்தில், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் முன்னிலையில், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பு விழாவினை நடத்தி வைத்தார்.

சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், செட்டியூர் மாரி, கொளத்தூர் கணேசன், அமஜத்கான், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சுதர்சன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் நாகராஜ், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், கீதா, அமுதன், ஆனந்த், வெங்கடேஷ், இனியா, நந்தினி, தமிழ்நாடு மாணவர் கழக கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் சுகந்தன் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மணமகன் ஸ்ரீராம் எந்த அரசியல் பின்புலமோ, இயக்க பின்புலமோ இல்லாதவர், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சேலம் மாவட்டச் செயலாளர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு பெரியாரின் கொள்கைகள் மிகவும் பிடிக்கும், காதல் மற்றும் சுயமரியாதை திருமணம் செய்ய விரும்புகிறேன் எனவும், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் முன்னிலையில் இணையேற்பு விழாவை நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். தன்னுடைய திருமண நிகழ்வில் கருப்பு சட்டையோடு தோழர்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டுமெனவும் ஆசைப்பட்டார். இந்த சுயமரியாதை திருமண நிகழ்வில் மாவட்டச் செயலாளர் உறுதிமொழி வாசித்த போது பெரும் ஆரவாரத்துடன் உறவினர்கள் நண்பர்கள் வரவேற்றனர். காவை ஈசுவரன் இது ஜாதி மறுப்பு திருமணம் என சொன்னவுடன் மண்டபத்தில் அனைவரும் கை தட்டி உற்சாகப்படுத்தியது நெகிழ வைத்தது.

## லெனின் சுப்பையா நினைவுநாள்

பெரியார் சிந்தனையாளர் இயக்கம் நடத்திய லெனின் சுப்பையா நினைவேந்தல் படத்திறப்பு மற்றும் புதுச்சேரி மண்ணில் ஓபிசி,எஸ்.சி,எஸ்.டி பூர்வீகப் பெண்களின் (தாய் வழி) பிள்ளைகள் அகதிகளாக? நீதிக்கேட்போம்! உரிமை மீட்போம் பொதுக்கூட்டம் 21.02.2026 அன்று மாலை 5-மணிக்கு சுதேசி மில் புதுச்சேரியில் நடைபெற்றது. விடுதலை கலைக்குழு தோழர்கள் பாடல்களால் லெனின் சுப்பையா அவர்களின் சமூக அரசியல் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினார்கள். பாடல்கள் வழியாக உணர்வு அலைகளில் காண்போரை மூழ்கடித்தார்கள். பாடல்களுக்கு இடையே இணைப்புகளையும் வழங்கினார்கள். திராவிட மகிழன் குழுவினருடன் இணைந்து லெனின் சுப்பையா பாடல்களை பாடினார். மகேசு (மக்கள் மன்றம்) லெனின் சுப்பையா மற்றும் செந்தாரகை படத்தினை திறந்து வைத்து பாடல்கள் வழியாக பாமரனுக்கும் உணர்வூட்டியவர் லெனின் சுப்பையா என்றும் புதுச்சேரி தாய்வழி பிள்ளைகள் பிரச்சனையில் போராட்டமே தீர்வு என்றார்.




கோவன் (செயலாளர் மகஇக) தன் பாடல்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். நிறைவாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னாள் லெனின் சுப்பையா திருப்பூர் மாநாட்டில் பாடல்களுடன் அதற்கேற்றார் போல் அருமையான இணைப்புரை வழங்கினார். அந்த இணைப்புரையை ஒலி நாடாவில் கேட்டு புரட்சிப் பெரியார் முழக்கம் வார இதழில் பதிவு செய்திருந்தேன். அதை அவர் பாராட்டி எனக்கு கடிதமும் எழுதி இருந்தார். அவருடைய பாடல்கள் வழியாக கொள்கை சொல்லும் விதமும், பெரியாருக்கும் புதுச்சேரிக்கும் உண்டான தொடர்பு குறித்தும் பல செய்திகளை கூறி சிறப்புரையாற்றினார்.

புதுவை தீனா நிகழ்வை ஒருங்கிணைந்தார்.திமுக, விசிக மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), அருண் ( இளைஞரணி அமைப்பாளர்), சுகந்தன் (மாணவர் கழகம்), அஜித், யாழினி, அசோக், செய்தியாளர் பிரசாந்த், கடலூர் சிவா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தெருக்களுக்கு ஜாதிப்பெயரை நீக்கக்கோரி மனு!



சேலம் மாவட்டம் நங்கவள்ளி பேரூராட்சிக்கு உட்பட்ட 6 தெருக்களில் ஜாதிப் பெயர் பலகை அடையாளமாக வைத்ததை கண்டித்து 09.03.2026 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பாக புகார் மனு அளிக்கப்பட்டது.

சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர், கவியரசு ஆகியோர் இருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : March 26, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran